ந.க.எண்.5704/2017/ப2 (வளர்ச்சி) நாள்:12.11.2019

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தமிழ்நாடு

புதுக்கோட்டை மாவட்டம்

## இணையதள அறிவிக்கை (Notification)

### அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் (அரசுத் தலைப்பு) அலுவலக உதவியாளர் பணிநிலையில் உள்ள காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|
| 1 | 3 | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) ஆதரவற்ற விதவை- பெண்கள்) | 2 |
| 2 | | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமையற்றவர்) | 10 |
| 3 | | பொதுப்போட்டி (முன்னுரிமையற்றவர்) | 11 |

**தகுதிகள்:**

| இனம் | வயது (01.07.2019 அன்று) | கல்வித் தகுதி |
|---|---|---|
| ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) ஆதரவற்ற விதவை- பெண்கள்) | 18 வயது பூர்த்தயடைந்தும், 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். | 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமையற்றவர்) | 18 வயது பூர்த்தயடைந்தும், 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். | |
| பொதுப்போட்டி (முன்னுரிமையற்றவர்) | 18 வயது பூர்த்தயடைந்தும், 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். | |

அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை நிலை எண் 44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (T2) நாள்: 11.03.2015 மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண் ந.க.53656/2019/எப்1 நாள்: 18.10.2019இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி நிரப்பப்படும்.

நிபந்தனைகள்:

1. விண்ணப்பதாரர் தங்களின் விண்ணப்பத்தினை வெள்ளைத் தாளில் எழுதி புகைப்படத்துடன் பெயர், முகவரி, கல்வித்தகுதி, இனம் ஆகிய விவரங்களுடன் அனுப்ப வேண்டும்.
2. இதற்கென விண்ணப்பப் படிவம் ஏதும் தனியே வழங்கப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித்தகுதி சான்றிதழ்கள் மற்றும் முன்னுரிமைக்கான நகலினையும் சுயசான்றொப்பம் செய்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
4. பரிசீலனையின்போது விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
5. விண்ணப்பங்களை 25.11.2019 அன்று மாலை 5.45 மணிக்குள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), வளர்ச்சிப் பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை- 622 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
6. குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
7. அஞ்சலக தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.
8. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
9. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
10. தேர்வு அழைப்புக் கடிதம் பெறுவது மட்டும் வேலைக்கான உத்தரவு என்று கருதக்கூடாது.
11. தேர்வு நாள், தேர்வு நேரம் மாறுதலுக்குட்பட்டது.
12. தேர்வுக்கு வரும் நபர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
13. நேர்காணல் அழைப்பு தகுதியான விணணப்பதாரர்களுக்கு மட்டும் தனியாக அனுப்பப்படும்.
14. தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு 2017 திருத்திய ஊதியக் குழு விதிகளின்படி ஊதியம் அட்டவணை (Pay Matrix) : ரூ.15700-50000 (Level-1) மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

மாவட்ட ஆட்சியருக்காக,
புதுக்கோட்டை.